# "சமகால விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளில் நிகழும் ஒழுக்க மீறுகைகள்" - ஒரு பிரயோக ஒழுக்கவியல் ஆய்வு.


உதயகுமார் சதுர்சனன்

பதிவு இலக்கம் : EU/IS/2016/AC/652

சுட்டெண் : CS7552



FAC 1270

Project Report

Library - EUSL

LIBRARY

22 DEC 2023

EUSL, SRI LANKA


இந்த ஆய்வுக் கட்டுரையானது இளங்கலைமாணி மெய்யியல் சிறப்புக்கற்கை நெறியின் ஒரு பகுதி தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறைக்கு 2023ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது.


தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.


-2023-

# ஆய்வுச்சுருக்கம்

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவு முதலிடம் வகிக்கின்றது. உணவினை உற்பத்தி செய்வதில் விவசாயத்துறை ஆனது பெரும் பங்காற்றுகின்றது. அந்தவகையிலே சனத்தொகை பெருக்கத்திற்கு ஏற்ப உணவு உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதன் பொருட்டு விவசாய நடவடிக்கைகளின் போது பல்வேறுபட்ட தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுக் கொண்டு வருகின்றன. பிறர் நலனில் அக்கறை கொள்ளாது தனது சுய இலாபம் கருதி இவ்வாறு அதிகளவில் விவசாய நடவடிக்கைகளில் பல்வேறு புதிய உத்திகளைப் பாவிப்பதன் காரணமாக ஏற்படக்கூடிய ஒழுக்கப் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதாக இவ்வாய்வானது அமைந்து காணப்படுகின்றது.

மனித வாழ்வில் நியாயத்தினை போதித்து சீரான வழியில் வாழ வழிகாட்டுவதாக இந்த ஒழுக்க நெறிகள் அமைந்து காணப்படுகின்றன. இதில் முரண்பாடு தோன்றுகின்ற பொழுது ஒழுக்க மீறுகைகள் இடம்பெறுகின்றன.

சமகால விவசாய நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற நவீன உத்திகளே இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணியாக அமைத்து காணப்படுகின்றது. சூழல் சமநிலைச் சீரழிவு நீர், நிலம், வளி மாசுபடல் போன்ற சூழல் பிரச்சினைகளை தோற்றுவிப்பதுடன் மட்டுமன்றி மனிதனுக்கும் பல்வேறு விதமான சிக்கல்களையும் உண்டு பண்ணுவதனை காணக்கூடியதாக உள்ளது. எனவே இவ்வாறான பிரச்சினைகள் விரிவாக ஆராய்வதாக இவ்வாய்வானது அமைந்து காணப்படுகின்றது.

இரசாயன பதார்த்தங்கள் தீங்குகளை விளைவிப்பது தொடர்பாக அறிவுறுத்தல்கள், எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் கூட தொடர்ந்தும் அவை பயன்படுத்தப்பட்டுக் கொண்டு வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே இரசாயன பதார்த்தங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பாக விரிவான பார்வையினை செலுத்துவதாகவும் அமைந்து காணப்படுகின்றது.

மேலும் பசுமைப்புரட்சியின் போது உருவாகிய தொழிநுட்பங்கள், மரபணு தொழிநுட்பம் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் போன்றவற்றின் பாவனையினைக் குறைப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுகள் இவற்றின் மூலமாக ஏற்படும் தீங்குகளை குறைத்துக் கொள்ள உதவியாக அமையும். இன்று சமூகம் எதிர்நோக்கும் பாரிய சவாலாக இந்த நவீன தொழிநுட்பங்கள் விளங்குவதன் காரணமாக அது தொடர்பான ஆய்வானது காலத்தின் தேவையாகக் காணப்படுகிறது. எனவே மேற்படி ஆய்வானது சமகால விவசாய நடவடிக்கைகளில் ஏற்படும் ஒழுக்கப்பிரச்சினைகளை குறைப்பதற்கு உதவியாக அமையும்.

# உள்ளடக்கம்


| விபரம் | பக்கம் |
|---|---|
| DECLARATION | i |
| உறுதியுரை | ii |
| முன்னுரை | iii |
| நன்றியுரை | iv |
| ஆய்வுச்சுருக்கம் | vi |
| உள்ளடக்கம் | vii |

**அத்தியாயம் 01**

1.0 ஆய்வு அறிமுகம் 1

1.1 ஆய்வுத் தலைப்பு ........ 1

1.2 ஆய்வு அறிமுகம் ........ 1

1.3 ஆய்வின் நோக்கம் ........ 2

1.3.1 பிரதான நோக்கம் ........ 2

1.3.2 உப நோக்கங்கள் ........ 2

1.4 ஆய்வுப் பிரச்சினை ........ 3

1.5 ஆய்வின் கருதுகோள் ........ 3

1.6 ஆய்வின் முக்கியத்துவம் ........ 3

1.7 ஆய்வு முறையியல் ........ 3

1.8 இலக்கிய மீளாய்வு ........ 4

1.9 ஆய்வுக் கட்டமைப்பு ........ 5

**அத்தியாயம் 02**

2.0 ஒழுக்கவியல் 7

2.1 ஒழுக்கவியலின் அறிமுகம் ........ 7

2.2 ஒழுக்கவியலின் இயல்பும், பரப்பும். ........ 8

2.3 ஒழுக்கவியலின் முக்கியத்துவம் ........ 10

2.4 ஒழுக்கவியலின் வரலாற்று ரீதியான நோக்கு ........ 11

2.4.1 ஆதி கிரேக்க காலம் ........ 11

2.4.2 கிரேக்க காலம் ........ 13

2.4.3 மத்திய காலம் ........ 14

2.4.4 நவீன காலம்........................................................................15

2.4.5 தற்காலம் ..............................................................................16

2.5 ஒழுக்கவியலின் பிரிவுகள் .........................................................17

2.5.1 அதீத ஒழுக்கவியல் ...............................................................17

2.5.2 நியம ஒழுக்கவியல்.................................................................18

2.5.3 பிரயோக ஒழுக்கவியல் ...........................................................19

பிரயோக ஒழுக்கவியலின் பிரிவுகள் ..............................................20


## அத்தியாயம் 03

3.0 விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள் 34

3.1 விவசாய வரலாறு ..........................................................................34

3.1.1 ஆரம்பகால விவசாயம் ................................................................34

3.1.2 சமகால விவசாயம்.....................................................................37

3.1.3 இலங்கை விவசாய வரலாறு .........................................................40

இலங்கையில் ஆரம்பகால விவசாயம்...................................................40

இலங்கையில் சமகால விவசாயம் ........................................................43

3.2 விவசாயத் தொழினுட்பம் ..............................................................45

3.2.1 பசுமைப் புரட்சி (Green Revolution).............................................45

3.2.2 மரபணு தொழினுட்பம் (Gene Technology).......................................47

3.3 விவசாயமும் இரசாயனமும்............................................................48

3.3.1 விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளில் இரசாயனப் பதார்த்தங்களின் அறிமுகம் ..........................................................................48

3.3.2 விவசாயம் சார்ந்த இரசாயனப் பதார்த்தங்களின் வகைப்பாடு ...............49

3.3.3 விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளில் இரசாயனப் பதார்த்தங்களின் பயன்பாடு...........................................................................51

3.4 விவசாயத்தில் பசளைப் பிரயோகம் ..................................................56

3.5 விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளில் இரசாயனப் பயன்பாடு அதிகரிப்பிற்கான காரணிகள் ...........................................................................57

3.6 இரசாயனப் பாவனை தொடர்பான சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் .........59


## அத்தியாயம் 04

4.0 சமகால விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளில் நிகழும் ஒழுக்கப் பிரச்சனைகள் 64

4.1 பசுமைப்புரட்சியால் நிகழும் ஒழுக்கப் பிரச்சனைகள் ..................................64

4.1.1 சூழல் சார்ந்த ஒழுக்கப் பிரச்சனைகள் ....65
மண்வளம் சார்ந்த ஒழுக்கப் பிரச்சினைகள் ....67
நீர் மற்றும் வளி சார்ந்த ஒழுக்கப் பிரச்சினைகள் ....71
உயிர்ச் சூழல் சார்ந்த பிரச்சினைகள் ....75
4.1.2 சமூகம் சார்ந்த ஒழுக்கப் பிரச்சனைகள் ....79
சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் ....79
கால்நடைகளின் சுகாதாரம் தொடர்பான ஒழுக்கப் பிரச்சனைகள் ....85
அரசியல் சார்ந்த ஒழுக்கப் பிரச்சினைகள் ....90
பொருளாதார ரீதியான ஒழுக்கப் பிரச்சினைகள் ....92
மரணம், தற்கொலை தொடர்பான பிரச்சினைகள் ....96
உளரீதியான பாதிப்புகள் ....98
4.2 மரபணுத் தொழிநுட்பத்தால் நிகழும் ஒழுக்கப் பிரச்சினைகள் ....100

## அத்தியாயம் 05

5.0 தொகுப்புரையும், பரிந்துரைகளும் மற்றும் முடிவுரையும் 102
5.1 தொகுப்புரை ....102
5.2 முடிவுரை ....103
5.3 பரிந்துரைகள் ....105
உசாத்துணைகள் 111